பக்கங்கள் : நான்கு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 தை 14 ஞாயிற்றுக்கிழமை (28.01.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 64

# ஊரடங்கு வேளையில் நடமாடுவோரை கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்க



## பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா பலாலித் தளபதிக்கு நேற்றுப் பணிப்பு



யாழ்ப்பாணம், ஜனவரி28

குடாநாட்டில் இரவு வேளையில் - ஊரடங்கு நடைமுறையில் உள்ள நேரத்தில் - நடமாடுபவர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவேண்டும். - இதற்கான பணிப்புரையை பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா பலாலி பாதுகாப்புத் தலைமையகத்தின் தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறிக்கு நேற்று விடுத்துள்ளார்.

ஊரடங்கு நடைமுறையில் உள்ள நேரத்தில் கொள்ளைகள், கொலைகள், கைதுகள், ஆள்கள் கடத்தல் போன்ற சம்பவங்கள் இடம்பெறுவதாக தனது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

அத்தகைய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் வகையில் ஊரடங்கு விதிகளை கடுமையாக நடைமுறைப்படுத்தி இந்த நடவடிக்கையில் ஈடுபடுபவர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த வேண்டும் - என்று பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தமது அறிவுறுத்தலில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - குடாநாட்டில் அதிகரித்துவரும் கொலை, கொள்ளை, ஆள் கடத்தல் ஆகியவற்றைத் தடுக்கும் பொருட்டு சகல கிராமசேவையாளர் பிரிவுகளிலும் விழிப்புக் குழுக்களை அமைக்கும்படி யாழ். அரச அதிபருக்கு பிரதம நீதியரசர் உத்தரவிட்டுள்ளார்.

விழிப்புக்குழுவுக்கு பொலீஸாரும் படையினரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் பிரதம நீதியரசர் சம்பந்தப்பட்ட தரப்புக் களையும் அவர் பணித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து யாழ்.நீதிமன்றத்தில் நேற்று கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இதில் யாழ்.மாவட்டத்தில் பணிபுரியும் நீதிபதிகளும் அரச அதிபரும் கலந்து கொண்டனர்.

விழிப்புக் குழுக்களை கிராம சேவையாளர்கள் மூலம் அமைப்பது குறித்து அங்கு விரிவாக ஆராயப்பட்டது. (அ-1)

## ஊரடங்கு நேரத்தில் நடமாடுவோர் படையினரால் கைது செய்யப்படுவர்

யாழ்ப்பாணம், ஜன.28

ஊரடங்கு நடைமுறையில் உள்ள நேரத்தில், அதனை மீறும் விதத்தில் நடமாடுவோர் கைது செய்யப்படுவர். அவ்வாறு கைது செய்யப்படுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு பலாலிப் பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் நேற்று விடுத்த பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:-

யாழ்.குடாநாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள ஊரடங்குச் சட்டத்தை கடுமையாக அமுல்படுத்தப் பாதுகாப்புப் படையினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். தற்போது நடைமுறையில் உள்ள ஊரடங்குச் சட்டம் இரவு 7 மணிக்கு அமுல்படுத்தப்பட்டு மறுநாள் அதிகாலை 4 மணிக்குத் தளர்த்தப்படும்.

பொதுமக்களின் பாதுகாப்பைக்கருதியே இந்த ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. இதனை மீறும் விதமாக வீதிகளில் நடமாடுவோர் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுப்பதற்குப் பாதுகாப்புப் படையினர் தீர்மனித்துள்ளனர்.

ஆதலால் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள நேரத்தில் அதனை மீறும் விதமாக வீதிகளில் நடமாடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. - என்றுள்ளது. (அ)

## திருக்கோவிலில் நேற்றுத் தாக்குதல்

அம்பாறை,ஜன.28

அம்பாறை, திருக்கோவிலில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் ரோந்து சென்ற அதிரடிப் படையினரின் வாகனம் மீது மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் 8 படையினர் கொல்லப்பட்டனர் என்றும் 12 படையினர் காயமடைந்தனர் என்றும் இணையத் தளச் செய்திகள் தெரிவித்தன. (1)

## வவுனியா–கணேசபுரத்தில் துப்பாக்கிச் சூட்டில் தந்தையும் மகனும் பலி!

வவுனியா,ஜன.28

வவுனியா-மன்னார் வீதி கணேசபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு தந்தையும் மகனும் அவர்களது வீட்டில் வைத்து இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். பொலீஸார் இச்சடலங்களை நேற்றுக்காலை மீட்டுள்ளனர்.

சடலங்கள் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டன. இச்சம்பவம் தொடர்பாக பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ 12)

# கொழும்பு துறைமுகப் பகுதியில் 3 தாக்குதல் படகுகள் அழிப்பு!

### அரச தரப்பு அறிவிப்பு

கொழும்பு, ஜன.28

கொழும்புத் துறைமுகப் பகுதியில் - முகத்துவாரத்தை அண்டிய வெளிச்ச வீட்டுக்குச் சமீபமாக - வந்த மூன்று தாக்குதல் படகுகளைக் கடற்படையினர் விரட்டிச் சென்று தாக்கி நேற்று அழித்ததாக அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப் பட்டது.

மூன்று படகுகளில் ஒன்றைத் துறைமுகத்திலிருந்து ஆறு கடல் மைல் தொலைவில் வைத்து கடற்படையினர் தமது அதிவேக தாக்குதல் படகுகளில் சென்று அழித்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

தாக்குதல் படகுகள் விடுதலைப் புலிகளினுடையனவே என்றும் அந்த அமைப்பினைச் சேர்ந்த மூவரைத் தாம் கடலில் வைத்து கைதுசெய்துள்ளதாகவும் கடற்படையினர் கூறினர்.

நாட்டின் பிரதான துறைமுகமான கொழும்பு துறைமுகப் பகுதியில் வைத்துக் கடற்படைப் படகுகளைத் தாக்கிப் பீதியை உண்டாக்கும் நோக்குடனே விடுதலைப் புலிகள் இத்தாக்குதல் முயற்சியை மேற்கொண்டிருக்கின்றனர்.

அவர்களின் படகு வெடித்துச் சிதறிய விதத்தைப் பார்க்கும் போது அதனுள் நிறைய வெடிபொருள்கள் இருந்திருக்க வேண்டும் என்றே தோன்றுகின்றது. அது ஒரு தற்கொலைத் தாக்குதல் படகாகவே இருந்திருக்க வேண்டும்.

விடுதலைப் புலிகள் கிழக்கில் பெரும் தோல்வியைக் கண்டுள்ளனர். அதனால் தங்கள் வலுவை இங்கு காட்டுவதற்கு முனைந்திருக்கலாம் - என்று இராணுவப்

(04ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.க., முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் 23 பேர் இன்று அரசுடன் இணைகின்றனர்

## அவர்களுக்கு அமைச்சர், பிரதி அமைச்சர் பதவிகள்

கொழும்பு, ஜன.28

ஐ.தே.கட்சியின் அதிருப்திக் குழு மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றைச் சேர்ந்த 23 உறுப்பினர்கள் இன்று அரசுடன் இணைகின்றனர்.

அதனைத் தொடர்ந்து அமைச்சரவை மாற்றியமைக்கப்படும்.

புதிய அமைச்சர்கள் பதவியேற்கும் விசேட நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு அலரி மாளிகையில் இடம்பெறவுள்ளது.

ஐ.தே.கட்சியின் அதிருப்திக் குழுவின் தலைவர் கரு ஜெயசூரிய தலைமையில், மிலிந்த மொறகொட, பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், பந்துலகுணவர்த்தன, ராஜித சேனாரத்ன உட்பட 17 உறுப்பினர்களும் -

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் ஆறு உறுப்பினர்களும் - இன்று அரசுடன் இணைகின்றனர்.

அமைச்சரவையில் இணைந்துகொள்வது, ஒதுக்கப்படவிருக்கும் அமைச்சுகள் ஆகியன தொடர்பாக கரு ஜெயசூரிய தலைமையிலான 17 உறுப்பினர்கள் நேற்றிரவு ஜனாதிபதியைச் சந்தித்து நீண்டநேரம் கலந்துரையாடினர்.

(04ஆம் பக்கம் பார்க்க)

# கடத்தப்பட்ட மாணவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குக

## ஜனாதிபதிக்கு நா.உ. கடிதம்

கொழும்பு, ஜன.28

வடமராட்சியில் காணாமற்போன இரு பாடசாலைகளின் மாணவர்களையும், கடத்தப்பட்ட ஏனைய மாணவர்களையும் உடன் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் குடாநாடு தழுவிய ரீதியில் மாணவர்கள் பாடசாலை பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதைத் தவிர்க்க முடியாது போகும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நேற்று அனுப்பி வைத்த கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வேலாயுதம் ம.வி மாணவனான பரஞ்சோதி தனஞ்செயன், ஹாட்லிக் கல்லூரி மாணவனான முருகானந்தன் பிரபானந்தன்

(03ஆம் பக்கம் பார்க்க)

# அரசுடனும் விடுதலைப் புலிகளுடனும் நோர்வே விரைவில் தொடர்பு கொள்ளும்

இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து நோர்வே அவதானித்து வருகின்றது. அது விரைவில் அரசாங்கத்துடனும், விடுதலைப் புலிகளுடனும் தொடர்புகொள்ளும்.

இவ்வாறு கொழும்பில் உள்ள நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தனிடம் கூறியதாக அறியப்படுகின்றது.

தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாகக் கொழும்பிலுள்ள நோர்வே தூதுவரை இரா. சம்பந்தன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சந்தித்துப் பேசினார். நோர்வே தூதுவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தினர் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கைகள், மக்களின் இடப் பெயர்வுகள் குறித்து தூதுவரிடம் சம்பந்தன் விளக்கிக் கூறியுள்ளார். அத்துடன் போர்நிறுத்த உடன்படிக்கை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பிலுள்ள இராஜதந்திரிகளைச் சந்தித்து தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாகக் கலந்துரையாடி வருவது தெரிந்ததே. (அ)

# அத்தியாவசிய உணவுப் பொருள்கள் காங்கேசன்துறையில் இறக்கப்படுகின்றன

யாழ்ப்பாணம்,ஜன.28

குடாநாட்டுக்கு அத்தியாவசியப் பொருள்களுடன் வந்துள்ள 'ஜால' கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் பணி, காங்கேசன்துறை துறைமுகத்தில் நேற்று ஆரம்பமான.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வடமராட்சிக் கடற்பிராந்தியத்தில் இடம்பெற்ற மோதலின்போது 'லிவர்பூல்' என்ற உணவுக் கப்பல் சேதம் அடைந்திருந்தது.

அதன் பின்னர் பருத்தித்துறைத் துறைமுகத்திற்கு கப்பல் வருவது நிறுத்தப்பட்டது.

தாக்குதல் சம்பவத்தின் பின்னர் அத்தியாவசியப் பொருள்களுடன் வந்துள்ள 'ஜால' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் பணிகள் காங்கேசன்துறைத் துறைமுகத்தில் நேற்று ஆரம்பமாகின.

அடுத்து வரவுள்ள 'ஜென் கிளிப்பர்' கப்பலில் இருந்தும் பொருள்கள் காங்கேசனிலேயே இறக்கப்படும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது. (அ-)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## விற்பனைக்கு

13 சிறி XXXX
மொடல் பொக்ஸ்
லான்சர் கார் புதிய
ஆட்டோவிற்கு மாற்றம்
செய்யப்படும். அல்லது
விற்பனைக்குண்டு.
தொ.பே.இல.:
**222 3525**

## விற்பனைக்கு

அளவெட்டி வடக்கு பிரதான வீதியில்
4 ¾ பரப்புக்காணி வீட்டுடன்
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 011 4949234

## விற்பனைக்கு

* லான்ட்மாஸ்ரர் (குறுகிய காலம் பாவித்தது)
* ஜெனரேற்றர் * நீர் இறைக்கும் இயந்திரம்
* தார்சீற், வளை, கைமரங்கள், சிலாகைகள்

தொடர்பு: 077 9905269, 077 9360553
(இயன்றவரை சனி, ஞாயிறு நாள்களில் தொடர்புகொள்ளவும்) (57481)

## கண்ணீர் அஞ்சலி

திருமதி கனகலிங்கம் கலாஜோதி
நீர்வேலி ஸ்ரீமுருகன் மாதர் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினரும் சங்க அங்கத்தவருமான
**திருமதி கனகலிங்கம் கலாஜோதியின்**
மறைவையிட்டு எமது சங்கம் அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன்,
அவரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
அங்கத்தவர்களும்
நிர்வாக சபை உறுப்பினர்களும்.
(57562)

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

i. Vacancies in the Faculty of Medicine
ii. Vacancies for the post of Senior Professor / Professor

Further to the Advertisements dated 09.1.1.2006 and 22.01.2007 entertaining applications for the post of Senior Professor and other academic positions, the salary scale of the Senior Professor given in the advertisement should read as follows:

Rs.57,755-11x900-67,655/- p.m.

**Registrar,**
**university of Jaffna.**
2007.01.26

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
# கனகசபை முருகேசு

(Retired Controller, SriLankan Railways, Proprietor, North Ceylon Spun Pipe Company, Kilinotchi)

அன்னை மடியில் 06-05-1921 ஆண்டவன் அடியில் 29-12-2006

மலேசியாலவப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கை வதிவிடமாகவும் பின்னர் கொழும்பு - 06, சின்சபா றோட், இல.641/3இல் வசித்துவந்தவருமாகிய எமது குடும்பத் தெய்வமாகத் திகழ்ந்த கனகசபை முருகேசு அவர்கள் சிவபதமடைந்த ஒரு மாத நிறைவையொட்டி, இன்று [28.01.2007] ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொழும்பு 04, பம்பலப்பிட்டி அரச தொடர்மாடி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவிருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனையடுத்து நடைபெறும் மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

அன்னாரின் மறைவுச் செய்தியை அறிந்து இறுதி நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய அனைவருக்கும் அஞ்சல், தந்தி, தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் ஏனைய வழிகளில் உதவியோர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். (சி/51919)

641/3, சின்சபா றோட், கொழும்பு-06. தொலைபேசி: 2552814 — மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
# சின்னத்துரை நவரட்ணம்

(ஆயுள் வேத வைத்தியர் - கோப்பாய்)

தோற்றம் 17-01-1923 மறைவு 29-12-2006

அன்பின் திருவுருவே பாசத்தின் ஒளி விளக்கே!
எங்களை நல்லோர்களாக வளர்க்க
உங்கள் மேனிதனை மெழுகுவர்த்தியாக்கி
எங்களை விட்டு தூரம் சென்றதேனோ?
எத்தனை மாதங்கள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எங்களை விட்டு அகலாது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (28.01.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகலில் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் எமது இல்லத்தில் நடைபெறுகின்றன. அந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம். (57511)

V.T. செல்லத்துரை வீதி, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய். — என்றும் உங்கள் நினைவுடன்: குடும்பத்தினர்.

## EXPOAIR எக்ஸ்போ ஏயார்

Your Friend in the skies... வானத்தில் உங்கள் நண்பன்...

# விசேட அறிவித்தல்

எக்ஸ்போ ஏவியேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனம் (Expo Aviation (Pvt) Ltd.) யாழ்ப்பாணத்தில் இருந்து, கொழும்புக்கும் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்குமான ஒரு வழிப் பயணக் கட்டணங்களைக் கீழ்க்கண்டவாறு நிர்ணயித்துள்ளது என்பதனை அறியத் தருகின்றோம்.

* பெரியவர்கள் - 9,700 ரூபா
* சிறுவர்கள் (2-12 வயதுக்கு இடைப்பட்டவர்கள்) - 6,150 ரூபா
* குழந்தைகள் (2வயதுக்குக் குறைந்தவர்கள்) - 1,050 ரூபா

யாழ்ப்பாணத்திலும் கொழும்பு- வெள்ளவத்தையிலும் அமைந்துள்ள எக்ஸ்போ ஏவியேஷன் நிறுவனத்தின் (Expo Aviation (Pvt) Ltd.) அலுவலகங்களில் மட்டுமே பயணிகள் தமது பயணச் சீட்டை நேரில் கொள்வனவு செய்யவேண்டும்.

மேற்குறிப்பிட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாகச் செலுத்தி கொள்வனவு செய்யப்படும் பயணச் சீட்டுகளுக்கு எக்ஸ்போ ஏவியேஷன் நிறுவனம் எந்தப் பொறுப்பினையும் ஏற்றுக்கொள்ளமாட்டாது.

தனியாள் எவரோ அல்லது முகவர் நிறுவனம் ஒன்றோ, மேற்குறிப்பிட்ட கட்டணங்களுக்கு மேலதிகமான கட்டணத்துக்குப் பயணச் சீட்டுகள் வழங்குவதற்கு முன்வந்தால், அது குறித்து உடனடியாக எமது கவனத்துக்குக்கொண்டு வருமாறு எக்ஸ்போ ஏவியேஷன் நிறுவனம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றது.

நாளை (29.01.2007)ஆம் திகதி தொடக்கம் (02.02.2007)ஆம் திகதி வரை நாள் ஒன்றுக்கு 100 இலக்க அட்டை (Token) மட்டுமே வழங்கப்பட்டு பயணத்துக்கான பதிவுகள் மேற்கொள்ளப்படும். அதன் பொருட்டு ஒருவருக்கு ஓர் இலக்க அட்டை (Token) மட்டுமே பெற இயலும். ஒரு சிவில் அனுமதிப்பத்திரத்தையே ஒருவர் பதிவு செய்யமுடியும். அதில் எத்தனை குடும்ப அங்கத்தவர்கள் இருந்தாலும் அவர் ஒருவரே பதியலாம். பதிவுகள் மேற்கொள்வதற்கு சிவில் பயண அனுமதிப்பத்திரம் கட்டாயமாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். இலக்க அட்டைகள் (Token) முதலில் வந்தவருக்கு முதலில் என்ற நியமப்படியே வழங்கப்படும். (சி/51931)



**EXPO AVIATION (PVT) LTD.**
1E, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# நன்றி நவிலல்



திருமதி
# தங்கச்சிப்பிள்ளை கந்தசாமி

மறைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் நேரடியாகக் கலந்து அஞ்சலி செலுத்தி அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிய அனைத்து உள்ளங்களிற்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு, அடுத்து (20.01.2007) அன்று நடைபெற்ற அந்தியேட்டிக் கிரியைகளிலும் மறுநாள் நடைபெற்ற சபிண்டீகரணக் கிரியைகளிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் மற்றும் எல்லாக் கிரியைகளையும் இனிதே நிறைவேற்றிய குருக்கள் அனைவருக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றியை நல்கிறோம்.

கொற்றாங்கலட்டி, வல்வெட்டி. — குடும்பத்தினர்.
தகவல்: ச.முருகேசு. (சி/51926)

## 41ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 15 10 1935 — மறைவு 19 12 2006

மண்கும்பானைச் சேர்ந்த
அமரர்
# கந்தையா சண்முகம்

நதியா–புதிய நதியா
நகைமாட உரிமையாளர்களின் தந்தையாராகிய

கந்தையா சண்முகம் அவர்களின் மரண செய்தி கேட்டு நேரில் வந்து ஆறுதல் அளித்தோர்க்கும், தொலைபேசி வாயிலாகவும், பத்திரிகை மற்றும் கண்ணீர்அஞ்சலி துண்டுப்பிரசுரங்கள் வாயிலாகவும், மலர் வளையம் வைத்தும், அனுதாபச்செய்திகளை தெரிவித்தோருக்கும், மேலும் வைத்தியசாலையில் உயிர்காக்க போராடிய வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்களுக்கும்.மற்றும் மயானம்மட்டும் வருகைதந்த அன்பு உறவினர்கள், நண்பர்கள்,வர்த்தக பிரமுகர்கள்அனைவருக்கும் மேலும் சகலவழிகளிலும் உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றிகளை தெரிவிப்பதோடு 19.12.2006 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அவர்களது வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று மு.ப. 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். தாங்கள்.தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அமரரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும். மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மரணச்சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் அழைப்பு கிடைக்க தவறியவர்களுக்கும் தற்போதையநாட்டுச்சூழ்நிலை காரணமாக இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

321T. கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம். தொ.பே.3479 — குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., தொ.ந.: 222 9933, 222 3837 - 222 9944

## சொல்லிலும் செயலிலும் இராணுவ முனைப்புப் போக்கு

இலங்கையில் சமாதான முயற்சிகள் நகரும் திசைப் போக்குக் குறித்து மேற்குலக நாடுகள் மற்றும் ஜப்பான் போன்றவற்றின் தூதுவர்களைச் சந்தித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெளிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக் கூறியிருக்கின்றனர்.

அமைதி முயற்சிகளைப் புறமொதுக்கி, சமாதான எத்தனங்களைப் பாழடித்துவிட்டு இராணுவ வழித் தீர்வு ஒன்றையே தமிழர்கள் மீது திணிப்பதற்கு கொழும்பு அரசு கங்கணம் கட்டிச்செயற்படுகின்றது.

அரசுப் படைகளின் செயல்கள் மூலம் மட்டுமன்றி அரசுத் தலைமையின் சொற்கள் மூலமும் இது உறுதியாகி வருகின்றது.

ஒருபுறம் அமைதி முயற்சிகளில் நாட்டம் காட்டுவதாகக் கூறிக்கொண்டு, மறுபுறத்தில் இராணுவ நடவடிக்கை முனைப்போடு பெரும் போர்த் தாக்குதல்களை அரசு முன்னெடுத்து வருவதை இப்பத்தியில் ஏற்கனவே விலாவாரியாக விவரித்திருந்தோம்.

அதுதான் தமது நோக்கும் இலக்கும் என்பதை நாட்டின் தலைவர் அதிபர் மஹிந்த ராஜபக்ஷ மாத்தளைப் பகுதியில் நீர்த்தேக்கத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையில் சூசமாக வெளிப்படுத்தியிருந்தார்.

மீண்டும் அதனை இப்போது ஜனாதிபதியின் சகோதரரும் ஜனாதிபதியின் போர் முனைப்புப் போக்குக்குச் செயல்வடிவம் கொடுப்பவருமான அவரது சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷ உறுதிப்படுத்தியிருக்கின்றார்.

யுத்த நிறுத்தம் நடைமுறையில் இருப்பதாக அரசு இன்னும் கூறுகின்றது. தாம் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதாக அரசுத் தலைமை சர்வதேச சமூகத்தை நம்பவைத்துக்கொண்டிருக்கின்றது. அதே சமயம் யுத்தப் பிரகடன அறிவிப்புகளை - முழக்கங்களை - சூளுரைகளை - அவர்கள் பகிரங்கமாகவும் விடுக்கின்றார்கள்.

"விடுதலைப் புலிகளின் கோட்டையான வடக்கு மற்றும் கிழக்கில் அவர்களின் இராணுவ உடைமைகள், ஆயுத தளபாடங்கள் அழித்து ஒழிக்கப்படும். அதில் அரசு உறுதி பூண்டுள்ளது" - என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய பிரகடனப் படுத்தியிருக்கின்றார்.

ஏற்கனவே புலிகள் தரப்பு மீது வலிந்து தாக்கும் இராணுவ நடவடிக்கைகளை அரசுப் படைகள் முன்னெடுத்துவரும் நிலையில், இனிமேலும் அதைச் செய்வோம் என்று அரசு இப்போது பகிரங்கமாக - உத்தியோக பூர்வமாக - அறிவித்திருக்கின்றது.

ஒருபுறம் யுத்தநிறுத்தம் எனக் கூறிக்கொண்டு மறுபுறம் இராணுவத் தாக்குதல் நடவடிக்கைத் திட்டங்களை அரசுத் தரப்பு முன்னெடுக்கின்றதென்றால், இவ்விவகாரத்தில் தனது இரட்டைவேட அணுகுமுறை நாடகத்தை சர்வதேச சமூகம் ஏமாளிபோல பார்த்திருக்கும் என்று இலங்கை அரசுத் தலைமை கருதுவதுதான் அதற்கு அடிப்படைக் காரணமாகும்.

சர்வதேச சமூகமோ ஒருபக்கத்தில் யுத்த நிறுத்தத்தை கடைப்பிடியுங்கள், அமைதி வழித் தீர்வுக்கு முயலுங்கள் என்று இரு தரப்புகளையும் - அரசு மற்றும் தமிழர் தரப்புகளை - வலியுறுத்துகின்றது.

அரசுப் படைகளின் வலிந்த இராணுவத் தாக்குதல் நடவடிக்கைகளுக்கு புலிகள் பதிலடி கொடுத்தால் உடனே அதைப் 'பயங்கரவாதம்' என விழுந்தடித்து அறிவிக்கின்றது. ஆனால், அதேநேரம் அரசுத் தரப்பின் வலிந்த இராணுவ நடவடிக்கைகளைப் பார்த்து வாளாவிருக்கிறது; மௌனம் காக்கின்றது. போதாக்குறைக்கு இலங்கை இனப் பிரச்சினைக்கு இராணுவ வழித் தீர்வு சாத்தியம் இல்லை என்று மட்டும் அவ்வப்போது தத்துவம் பிளக்கவும் அது தவறுவதில்லை.

இராணுவ வழித் தீர்வு சாத்தியமில்லை என்ற யதார்த்தத்தைப் புரிந்துகொண்டிருக்கும் சர்வதேச சமூகம், அந்த இராணுவ வழித் தீர்வில் முனைப்புடன் செயற்படும் இலங்கை அரசுத் தலைமையின் போக்கை அங்கீகரிக்கும் விதத்தில், இது விடயத்தில் மௌனம் சாதித்துவருவது அந்த முயற்சிக்கு உடந்தையாகின்றது.

சர்வதேச சமூகம் இவ்விவகாரத்தில் உரிய நடவடிக்கை எடுக்காமல் பொறுப்பிழந்து செயற்படத் தவறுவதும், இப்பிரச்சினை பெரும் இராணுவ மோதலாக - பேரழிவு தரும் யுத்தமாக - விரிவடைவதற்கு வழிசெய்யப்போகின்றது என்பதைச் சர்வதேச சமூகத்திற்கு நேரத்துடன் எடுத்துரைக்க வேண்டிய பொறுப்பு தமிழர்களுக்கு உண்டு. அதையே மேற்குலக நாடுகளின் தூதர்களுடனான தொடர் சந்திப்புகள் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செய்துவருகின்றனர்.

வலிந்து தாக்குதல் நடத்தும் அரசுப் படைகளின் இராணுவ - போர் - முனைப்புப் போக்கும், ஆயுத பலத்தால் இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் அதன் பேரினவாதத் திமிரும் இலங்கைத் தீவைப் பெரும் இரத்தக் களரிக்குள் ஆழ்த்தப்போகின்றன என்பது நிச்சயம்.

---

**வடமராட்சி மாணவர்கள் கைது:**

# பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் வாக்குறுதி

திருகோணமலை, ஜன.28

பருத்தித்துறையில் கடத்தப்பட்ட மாணவர்களை விடுவிப்பது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சருடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுப்பதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த உறுதி அளித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தூதுக்குழுவிடம் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம், சங்கத்தின் பத்திரிகைச் செயலாளர் தி.கணேசராசா ஆகியோர் கொண்ட குழு அமைச்சரைச் சந்தித்தது.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, வேலாயுதம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்கள் கடத்தப்பட்டமை தொடர்பாகவும், அதன் விளைவாக மாணவர்கள் பாடசாலைகளைப் பகிஷ்கரித்துப் போராட்டம் நடத்துகின்றனர். பருத்தித்துறையில் நடைபெறும் இப்போராட்டம் யாழ். மாவட்டம் முழுவதும் பரவும் ஆபத்துள்ளது. எனவே கல்வி அமைச்சர் என்ற ரீதியில் தலையிட்டு அம்மாணவர்களை உடன் விடுவிக்க நடவடிக்கை எடுப்பதன் மூலம் யாழ். மாணவர்களின் கல்வி பாதிக்கப்படாதிருக்க நடவடிக்கை எடுப்பதோடு, அவ்வாறான கடத்தல் சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாதிருப்பதை உறுதிப்படுத்துமாறும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தூதுக்குழு கல்வி அமைச்சரைச் சந்தித்து வலியுறுத்தியது என்றும் -

இவ்வாறு வலியுறுத்திய போதே கல்வி அமைச்சர் பாதுகாப்பு அமைச்சருடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார் என்றும்-

மேலும் பொதுச் செயலாளர் தெரிவித்தார். (அ-1)

## கொழும்புத்துறையில் கொள்ளை முயற்சி ஐவரைப் படையினர் கைதுசெய்தனர்!

யாழ்ப்பாணம்,ஜன.28

கொழும்புத்துறையில் ஆலயக் குருக்கள் ஒருவரின் வீட்டில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற கொள்கை முயற்சியில் சம்பந்தப்பட்ட ஐவர், படையினரின் உதவியுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொழும்புத்துறையைச் சேர்ந்த சங்கரராஜசர்மா ராஜராஜேஸ்வரன் என்பவரின் வீட்டில் கொள்ளையிட ஐவர் முயற்சி மேற்கொண்டனர்.

கொள்ளையர்களைக் கண்ட வீட்டார் அபயக் குரல் எழுப்பினர். அயல் வீட்டில் உள்வர்களும் சேர்ந்து குரல் கொடுத்ததை அடுத்து அவர்கள் தப்பி ஓடினர். சம்பவம் குறித்து உடன் அப்பகுதியில் உள்ள படையினருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது.

அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்துப் படையினர் தேடுதல் நடத்தினர்.

தேடுதலின்போது போலித் துப்பாக்கியுடன் ஐவரைப் படையினர் கைதுசெய்தனர்.

அவர்கள் பின்னர் யாழ். பொலீஸாரிடம் ஒப்படைக்கப் பட்டனர்.

பொலீஸார் பிரஸ்தாப நபர்களை யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் நேற்று மாலை ஆஜர் செய்தனர்.

சம்பந்தப்பட்டவர்களை மேலதிக விசாரணை செய்தவற்காக 48 மணிநேரம் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்குமாறும் -

அண்மையில் நடந்த கொள்ளைச் சம்பவங்களுடன் இவர்களுக்குத் தொடர்பு உண்டா என்பது குறித்தும் விசாரணை செய்யும்படியும் - நீதிவான் பொலீஸாருக்கு உ த்தரவிட்டார்.

கைதானவர்களில் மூவர் குருநகரைச் சேர்ந்தவர்கள். ஒருவர் ஆனைக்கோட்டையைச் சேர்ந்தவர். மற்றவர் வேம்படி வீதியைச் சேர்ந்தவராவர். (அ-1)

## சண்டிலிப்பாய் சந்தியில் வாகனம் நிறுத்தத் தடை

சண்டிலிப்பாய் சீரணி சந்திக்கு அருகாமையில் பிரதான வீதி ஓரமாக மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் நிறுத்துவதற்குத் பாதுகாப்புப் படையினர் தடை விதித்துள்ளனர்.

இதேவேளை- சண்டிலிப்பாய் - மானிப்பாய் பிரதான வீதியில் போக்குவரத்தில் ஈடுபடும் மோட்டார் சைக்கிள்களின் ஆவணங்கள் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன. (1-135)

---

**கடத்தப்பட்ட...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோர் கடத்தப்பட்டுள்ளனர்.

வேலாயுதம் மகா வித்தியாலயம் மற்றும் ஹாட்லிக் கல்லூரி மாணவர்களை விடுவிக்குமாறு கோரி இருபாடசாலைகளின் மாணவர்களும் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கல்விச் சமூகத்தினரும் கோரிக்கை விடுத்தபோதும் அவர்கள் விடுவிக்கப்படவில்லை. இதன் காரணமாக வடமராட்சிப் பாடசாலைகளில் பகிஷ்கரிப்பு இடம்பெற்றது. இந்தப் போராட்டம் நாளை (29.01.2007) தொடக்கம் குடாநாடு முழுவதும் விஸ்தரிக்கப்படவுள்ளதாக மாணவர்கள் அறிவித்துள்ளனர்.

கடந்த வருடம் மாணவர்களுக்கு எதிரான வன்முறைகளை நிறுத்தக்கோரி மாணவர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டம் ஒன்றை நடத்தினர். அந்தப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர அரசும் படையினரும் சில உத்தரவாதங்களை அரச அதிபர் மற்றும் யாழ்.ஆயர் ஊடாகவும் மாணவர்களுக்கு வழங்கினர்.

எனினும் மாணவர்கள் கடத்தப்படுவதும் கொல்லப்படுவதும் தொடர்ந்து நடைபெறுகின்றன.

கடந்த வருடம் கடத்தப்பட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவன் மார்க்கண்டு சசிகுமார் உட்பட கடத்தப்பட்ட அனைத்து மாணவர்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்று உள்ளது. (அ-1)

**நாளை**

தை - 15
திங்கட்கிழமை
29.01.2007
திதி: ஏகாதசி
பிற்பகல் : 01.25
நட்சத்திரம் : ரோகிணி
காலை: 06.55 வரை
சுபநேரம்: [illegible]
ராகுகாலம்: [illegible]

## வலி.வடக்கு மீள்குடியமர்வு விசாரணை உடுவில், சண்டிலிப்பாயில் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.28

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் மீளக் குடியமர விரும்பும் சண்டிலிப்பாய், உடுவில் பிரதேச செயலர் பிரிவுகளில் தற்போது வசிக்கும் குடும்பங்களுக்கான விசாரணைகள் நாளை திங்கட்கிழமை தொடக்கம் அந்தந்தப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபங்களில் நடைபெறவுள்ளன.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஜே/129, ஜே/154 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும் -

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் ஜே/196 கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்குமான விசாரணைகள் நாளை இடம்பெறவுள்ளன.

30ஆம் திகதி உடுவில் பிரதேச செயலர் பிரிவில் ஜே/187, ஜே/188, ஜே/201, ஜே/208 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும் -

31ஆம் திகதி சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஜே/132, ஜே/133 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேற்படி விசாரணைகளுக்குச் சமுகமளிப்போர் ஆட்பதிவு அடையாள அட்டை, காணி உரிமத்தை நிரூபிக்கும் ஆவணம், குடும்பப் பங்கீட்டு அட்டை/மின் கட்டண பற்றுச்சீட்டு/ சோலை வரி பற்றுச்சீட்டு, வாக்காளர் அட்டை, வாக்காளர் இடாப்பின் பிரிப்பிதழ், காணி உரிமையையும் வசிப்பிடத்தயும் உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் அல்லது உரிமையை உறுதிப்படுத்தும் சத்தியக்கடதாசியுடன் வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (1-203)

## தமது விருப்பமின்றி கூட்டுறவுச் சங்கத்தை மாற்றும் முயற்சிகள் குறித்து மக்கள் கவலை

யாழ்ப்பாணம், ஜன.28

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களில் ஒரு சாராரை அவர்களின் சுயவிருப்பமின்றி நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் இணைப்பதற்கு மறைமுகமான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகப் பாவனையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனால் பல்வேறு சிரமங்களையும் தாம் எதிர்கொள்வதாக அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

யாழ். ப.நோ.கூ.சங்கம் யாழ் மாநகர சபையை எல்லையாகக் கொண்டது. யாழ்.பிரதேச செயலர் பிரிவை முழுமையாகவும் நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவின் ஒரு பகுதியையும் சேர்ந்த பாவனையாளர்களை அது வாடிக்கையாளர்களாகக் கொண்டுள்ளது.

சங்கத்தின் எல்லைப் பரப்பில் 2/3 பங்கு பாவனையாளர்கள் யாழ்.பிரதேச செயலர் பிரிவிலும் 1/3 பங்கு பாவனையாளர்கள் நல்லூர் பிரதேச செயலர் பிரிவிலும் அடங்குகின்றனர்.

சங்கத்தின் 35 கிளைகளில், 19 தனியாக யாழ்ப்பாணத்திற்கும் 12 தனியாக நல்லூருக்கும் 04 கிளைகள் இரண்டு பிரிவினது பாவனையாளர்களுக்குப் பொதுவானவையாக இயங்குகின்றன.

பங்கீட்டு அட்டைகளுக்கு வழங்கப்படும் பொருள்களைத் தவிர விசேட தேவைகளுக்கு ஏனைய பொருள்களைப் பெற விண்ணப்பிக்கும் நல்லூர்ப் பகுதி பாவனையாளர்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்படுவதில்லை.

இதனால் மக்கள் பாதிக்கப்படுவதோடு மட்டுமன்றி அவர்களது விருப்பத்திற்கு மாறாக நல்லூர் ப.நோ.கூ.சங்கத்திற்கு மாற்றம் செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள்.

மக்கள் தாமாக, தமது வசதி கருதி ப.நோ.கூ.சங்கத்தைத் தெரிவு செய்வது வேறு; அதிகாரிகளின் மறைமுக நடவடிக்கைகள் மூலம் மாற்றப்படுவது வேறு என்று பாதிக்கப்படுவோர் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது! (அ-203)

---

**குடாநாட்டின் குட்டிச் செய்திகள்** யாழ்ப்பாணம்

## நெல்லியடியில் நேற்று மாலை ஒருவர் சுட்டுக் கொலை!

உடுப்பிட்டி, ஜன.28

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்துக்கு முன்பாக, நேற்று மாலை 5மணிக்கு ஒருவர் ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சுமார் முப்பத்தெட்டு வயது மதிக்கத்தக்க இந்த நபர் வெள்ளைச் சேர்ட்டும் வெள்ளை நீளக் காற்சட்டையும் அணிந்திருந்தார்.

அவரிடம் இருந்த திறப்புக் கோர்வையில் எஸ்.ராசநாயகம் எனப் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது.

அடையாளம் காணப்படாத நிலையில் அவரது சடலம் மந்திகை ஆஸ்பத்திரியில் வைக்கப் பட்டுள்ளது. (அ-1-155)

## கந்தரோடையில் இளைஞன் வெட்டிக்கொலை!

யாழ்ப்பாணம்,ஜன.28

சுன்னாகம், கந்தரோடையில் நேற்று மாலை 5 மணியளவில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

அடையாளம் காணப்படாத நிலையில் இளைஞனின் சடலம் அந்த இடத்திலேயே கிடந்தது எனத் தெரிவிக்கப்பட்டது.

மல்லாகம் நீதிவான் சம்பவ இடத்தில் இன்று விசாரணைகளை நடத்துவார். (1-4)

## கரவெட்டி விவசாயிகளுக்கு ம.எண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜன28

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விவசாயிகளுக்கு விவசாயத் தேவைக்கான மண்எண்ணெய் விநியோகம் செய்யப்படவுள்ளது.

கட்டைவேலி, உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கங்கள் மற்றும் நெல்லியடி விண்மீன் அங்காடி எரிபொருள் நிரப்பு நிலையம் என்பனவற்றின் ஊடாக இந்த விநியோகம் இடம்பெறவுள் ளது.

விவசாயிகள் கமநலசேவைத் திணைக்கள உதவி ஆணையாளரின் சிபாரிசுடன் மண்எண்ணெய் பெற்றுக்கொள்ள முடியும். (203)

## நிகழ்வுகள்

சுழிபுரம் யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது. எஸ்.சிவானந்தராசா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினராக வலி.மேற்குப் பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் பொ.சந்திரவேல கலந்துகொள்வார். (1-135)

* * *

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் சு.புண்ணியசீலன் தலைமையில் விழா நடைபெறும். (1-202)

* * *

சித்தன்கேணி நாமகள் சனசமூக நிலைய முன்பள்ளி திறப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நிலையத் தலைவர் கு.சுதாகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (1-203)

* * *

ஊர்காவற்றுறை லயன்ஸ் கழகத்தினரின் ஏற்பாட்டில் சிகுன்குனியா மருத்துவ முகாமும் விழிப்புணர்வுக் கருத்தரங்கும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் காரை சுந்தரமூர்த்தி நாயன்மார் வித்தியாலயத்தில் நடத்தப்படவுள்ளன. (1-203)

* * *

திருநெல்வேலியில் உள்ள பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் முதலாம் திகதி காலை 9 மணிமுதல் பூரணை ஆன்மீக நிகழ்வு இடம்பெறவுள்ளது. (1-203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கௌரவிப்பு விழா



யாழ்ப்பாணம் நாதஸ்வர தவில் கலைஞர்களால்
வடலியடைப்பு தவில் வித்துவான்
**நடேசன் ஜெயராமன்**
அவர்களுக்கு இன்று (28.01.2007)
ஞாயிற்றுக்கிழமை சித்தன்கேணி சிவன் ஆலயத்தில்
கௌரவிப்பு விழா நடைபெறும். கலைஞர்கள்
யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
**நாதஸ்வர கலைஞர்கள்**
**காரை பவப்பிரியன், வழக்கம்பரை சிவகுமார்.**
(57571)

## MOTORCYCLES FOR SALE

**Motorcycles mainatained by an INGO are for sale**

- Press-cup 50 Honda 3 nos
- Supercub 50 Honda 1 no
- Supercub 90 Honda 1 no
- Supercub 90 Daido 2 nos
- TVS XL Super 2 nos
- TVS Champ cc 49 1 no

Motorcycles could be inspected between 10 am to 3 pm on working days from January 29,2007 to February 7, 2007 at the address indicated below. Offers to be submitted on forms available with the Security Officer; your sealed quotation marked with the motorbike number on the top left hand corner of the envelop to be dropped in the box available at the security office or mailed to

**Administrative Officer,**
**FORUT,**
**139, Temple Road, Jaffna.**
On or before February 7, 2007, 5 pm
Tender opening will be on February 9, 2007 at 9 am
*Please bring your NIC along when you come*
(C/51933)

## 6ஆம் மாத நினைவஞ்சலி

தோற்றம் 20 - 07 - 1952



மறைவு 04 - 08 - 2006



தோற்றம் 18 - 03 - 1979

**S.கணேஸ்** **G.கவிதா (சியானி)**
(Action Contre la Faim ஊழியர்கள்)

உம் உணர்வுகளைச் சமாதியாக்கியவர்களுக்குப் புரியுமா?
உங்களின் எண்ணங்களின் வடிவம் சோறூட்டி, சீராட்டி வளர்த்த தந்தையுமில்லை
அதை உண்டு வளர்ந்த மகளுமில்லை மாமாவின் இருப்பிடம் நீங்கள் நாடிய
மாயம் கண்டு மரணமில்லாமல் மரணிக்கின்றோம் உறவுகள் நாம்.

பழம் றோட்,
ஆனைக்கோட்டை. (57552) **குடும்பத்தினர்.**

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



15.12.2006 அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்ப விளக்கு
**அமரர் முருகேசு சத்தியநாதன்**
அவர்களின் அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (28.01.2007) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் புற்றளை சித்திவிநாயகர் ஆலய மடத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அவரது இல்லத்தில் நிகழும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புலோலி தெற்கு, புலோலி. (57570)
தகவல்:
**மனைவி, மகன்.**

## மரண அறிவித்தல்கள்

### சுந்தர்லிங்கம் சிவமலர்

பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தர்லிங்கம் அவர்களின் அன்பு மனைவி சுந்தர்லிங்கம் சிவமலர் 26.01.2007 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவஞானம் (நெசவு ஆசிரியர்) மற்றும் பாக்கியம் தம்பதியரின் புத்திரியும் சிவபாலனின் (இ.போ.ச. நடத்துநர், காரைநகர்) அன்புச் சகோதரியும் மேனகையின் (ஆசிரியை, கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம்) அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (27.01.2007) சனிக்கிழமை நடைபெற்றன. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பண்ணாகம்,*
*சுழிபுரம்.* (57581)
தகவல்:
**சி.சுந்தர்லிங்கம் (கணவர்),**
**சி.சிவபாலன் (சகோதரன்).**

### திருமதி கணபதிப்பிள்ளை சாரதாம்பாள்

வேலணையைப் பிறப்பிடமாகவும் யாழ்.3ஆம் குறுக்குத்தெருவில் வசித்தவருமாகிய திருமதி கணபதிப்பிள்ளை சாரதாம்பாள் இந்தியாவில் காலமானார்.

அன்னார் நரசிங்கம் - கமலாம்பிகையின் (பாக்கியம்) மகளும் பொன்னம்பலம் கணபதிப்பிள்ளையின் மனைவியும் பொன்னம்பலம் - மாரிமுத்து தம்பதியரின் மருமகளும் பகீரதன், கிரிதரன், சிறீதரன் ஆகியோரின் தாயும் மணிமேகலை, லலிதாலட்சுமி, அந்தநொத், கிருஸ்ணவேணி ஆகியோரின் மாமியும் ஆர்த்திகா, ஸ்வரூபா, ஆனந், எஸ்ரல், லாவணியா, ஹரிஸ் ஆகியோரின் பேர்த்தியும் வீரகத்திப்பிள்ளை, திருநாவுக்கரசு, இராசம்மா ஆகியோரின் மைத்துனியும் வாசுகி, வள்ளிகாந்தன், உதயணன், உதயசேனன், செல்வ சேந்தன் ஆகியோரின் சிறிய தாயும் தவமணி, லீலாவதி, அகிலாவதி, ஆறுமுகம், ரகு ஆகியோரின் சகோதரியும் தவவிநாயகம், வேலாயுதபிள்ளை, நடேஸ்வரி, தையல்நாயகி, சிவபோகலட்சுமி, சித்திரவேல், நடேசபிள்ளை, குகன்தேவி, பவாணி ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும் தியாகராஜா, தெய்வேந்திரா ஆகியோரின் சம்மந்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.01.2007) திங்கட்கிழமை சென்னையில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி.51936)
தகவல்:
**கு.பாலகிருஸ்ணன்.**

## கொழும்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க செய்தி ஏஜென்சி ஒன்றிற்கு தெரிவித்தார்.

நேற்றுக்காலை 5.30 மணியளவில் கொழும்பு துறைமுகத்தை நோக்கி சந்தேகத்திற்கிடமாக வந்த 3 படகுகளை அவதானித்தனர் எனவும் -

கடற்படையினரின் ஒளிச் சமிக்ஞைகளுக்குக் கட்டுபடாததையடுத்து படகுகள் மீது தாம் தாக்குதல் நடத்தியதில் படகுகளில் ஒன்று வெடித்துச் சிதறியது எனவும் - கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏனைய இரண்டு படகுகளும் தப்பிச் செல்லமுற்பட்டபோது அவற்றை விரட்டிச் சென்ற கடற்படையினர் இரண்டாவது படகை துறைமுகத்திலிருந்து 11 கடல் மைல் தொலைவில் வைத்துத் தாக்கி அழித்தனர். இதனையடுத்து மூன்றாவது படகு துறைமுகத்தில் இருந்து 14 கடல் மைல் தொலைவில் வைத்து தாக்குதலுக்கு உள்ளானது. இப்படகு தீப்பற்றி எரிவதற்கு முன்னர் அதில் இருந்த மூவர் கடலில் குதித்தனர். இந்த மூவரும் பின்னர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர் என்று தேசிய பாதுகாப்பு ஊடக தகவல் நிலையம் தெரிவித்தது.

இதேவேளை,

மூன்று படகுகளில் ஒன்று கடலில் தரித்து நின்ற வர்த்தகக் கப்பலுக்கு அருகில் வெடித்துச் சிதறியதால் வர்த்தகக் கப்பலுக்குச் சிறுசேதம் ஏற்பட்டதாக துறைமுக அதிகார சபையின் உபதலைவர் பிலியட் விக்கிரம தெரிவித்தார்.

அதன் பின்னர் சேதமடைந்த கப்பல்துறைமுகத்துக்குள் கொண்டுவரப்பட்டது எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து நேற்றுக் காலை கொழும்பு துறைமுகத்துக்குள் கப்பல்கள் நுழைவதும், வெளிச்செல்வதும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது. எனினும் சில மணி நேரத்தில் துறைமுகத்தில் பணிகள் வழமைக்குத் திரும்பியதாக அறிவிக்கப்பட்டது.

(அ-12)

## ஐ.தே.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருஜெயசூரியவுக்கு பொதுநிர்வாக அமைச்சையும் -மிலிந்த மொறகொடவுக்கு நகர அபிவிருத்தி அமைச்சையும் -பேராசிரியர் ஜி.எல்.பீரிஸுக்கு உயர் கல்வி அமைச்சையும் -பந்துலகுணவர்த்தனவுக்கு வர்த்தக அமைச்சையும் - தர்மதாஸ பண்டாவுக்கு தோட்டத்துறை அமைச்சையும் - ராஜித சேனாரத்னவுக்கு காணி அமைச்சையும் - வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளதாக பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

ரவூப் ஹக்கீமுக்கு முக்கிய அமைச்சு ஒன்று வழங்கப்படலாம் என எதிர்பார்க் கப்படுகின்றது. அரசில்இணையும்சகலருக் கும் அமைச் சர் அல்லது பிரதி அமைச்சர் பதவிகள் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

புதிய அமைச் சர்கள் பதவியேற்றதுடன் அமைச்சரவையின் எண்ணிக்கை 52 ஆக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(அ-1-4)

**நியூட்டன் அக்கடமி**
**கோண்டாவில்**
**A/L 2009 தமிழ்**
By:-
**பத்மநாதன்**
ஆரம்பம் : 28.01.2007
Sun. 1.30
தனிப்பாட அனுமதி வழங்கப்படும்

**தேவை**
புக் பைண்டிங், ரைப்செற்றிங் தெரிந்த இருபாலாரும் விரும்பத்தக்கது.
ஸ்ரீசாயி ஒப்செட் பிறிண்டேர்ஸ்
செருக்கப்புலம் வீதி, கொக்குவில் (ஸ்ரேசன் றோட் முன்பாக) தொ.பே.: 0773583816

**வாடகைக்கு உண்டு**
நாவலர் வீதியில் கைலாசபிள்ளையார் கோயிலுக்கு சமீபமாக 2000 சதுர அடிக்கு மேற்பட்ட விஸ்தீரணத்தில் வீடு உடன் வாடகைக்குண்டு.
N.G.O/குடும்பத்தவர் உடன் தொடர்பு கொள்ளவும்.
0776282607

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்வி நிலையத்தில் 10 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றிய
எமது ஆசிரிய பெருந்தகை
**செ.அரசகேசரி**
[இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர், சென்.ஜோன்ஸ் கல்லூரி]
அவர்கள் 27.01.2007 இல் இறையடி சேர்ந்துள்ளார். அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை எடிசன் அக்கடமி சார்பில் காணிக்கையாக்குகின்றோம். அவரது இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(57580)
**எடிசன் அக்கடமி,**
**நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்,**
**கல்விசாரா உத்தியோகத்தர்கள்.**

## மரண அறிவித்தல்

### பிரதீபன் ரம்யா

அல்வாய், மாலு சந்தியைப் பிறப்பிடமாகக் கொண்ட பிரதீபன் ரம்யா 27.01.2007 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கிருஷ்ணன் பிரதீபன் (மணி) - ஜெயமாலா தம்பதியரின் புதல்வியும் S.K.R. ரான்ஸ்போட் உரிமையாளர் கிருஷ்ணனின் பேர்த்தியுமாவார்.

பூதவுடல் இன்று(28.01.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கருகம்பன் மயானத்துக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாலுசந்தி,*
*அல்வாய்.*
தகவல்:
கிருஷ்ணன்
S.K.R.ரான்ஸ்போட்

## மரண அறிவித்தல்கள்

### வீரசிங்கம் இரத்தினசிங்கம் (ரட்ணா)



பூநகரியைப் பிறப்பிடமாகவும் கட்டுடையை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் இரத்தினசிங்கம் 26.01.2007 வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் ஞானறதியின் அன்புக் கணவரும் சஞ்சீவன், கிருத்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும் வீரசிங்கம் - அன்னரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் ஞானபண்டிதர் - செல்வராணி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சாந்தாதேவி, பரராஜசிங்கம், காலஞ்சென்ற பிறேமாவதி, பூபாலசிங்கம், தர்மகுலசிங்கம், உதயகுமாரி, காலஞ்சென்ற தவகுலசிங்கம், குமாரகுலசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் செல்வஜீவன் (U.K.), விஜிதா (பிரான்ஸ்), வைதேகி, பிரதீபன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2007) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பிப்பிலி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கட்டுடை,*
*மானிப்பாய்.* (57568)
தகவல்:
**இ.ஞானறதி (மனைவி),**
**வி.ஞானபண்டிதர்.**

### வாரித்தம்பி பரமநாதன்

*(இளைப்பாறிய ஊழியர், இ.போ.ச. கோண்டாவில் டிப்போ)*



பூநகரியைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கை வதிவிடமாகவும் கொண்ட வாரித்தம்பி பரமநாதன் 26.01.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வாரித்தம்பி (பொன்னுச்சாமி) - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அன்னம்மா தம்பதியரின் மருமகனும் கனகம்மாவின் அன்புக் கணவரும் தையல்நாயகி, முத்துக்கிருஷ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஸ்ரீதரன், ஸ்ரீரஞ்சினி (சுவிஸ்), ஸ்ரீசுதன் (சுவிஸ்), மாலினி, நளினி (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காஞ்சனா, கோபாலகிருஷ்ணன் (சுவிஸ்), காயத்திரி (சுவிஸ்), ஜெகதீஸ்வரன், பிரபாகரன் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனும் திசானி, நர்மதா, டிலோஜினி, மேனுஜா, நிவேதன், நிதுஷா, நீகேஷ், மேகலா, தனுஷ், பவதர்ஷனா, தஷாந், அனந், அபிராமி, நிதுஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2007) ஞாயிற்றுக்கிழமை அவரின் மானிப்பாய் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. ஒரு மணிக்கு மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தற்போதைய முகவரி:**
**மானிப்பாய் இந்துக்கல்லூரி முன் ஒழுங்கை,**
**காவிகோவிலடி, மானிப்பாய்.**
தொ.பே.இல: 0776366346, 0776271311 (57564)
தகவல்:
**குடும்பத்தினர்.**

### திருமதி செல்வமலர் செல்லையா

*(செல்வி ரீச்சர், முன்னாள் ஆங்கில ஆசிரியர், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)*



கோப்பாய், தங்க வாசாவை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி செல்வமலர் செல்லையா 26.01.2007 வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற G.S.செல்லையாவின் (முன்னாள் அதிபர், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி) அன்பு மனைவியும் ஆனந்தராஜா (முன்னாள் அதிபர், சென். ஜோன்ஸ் கல்லூரி), கிறிஸ்ரபல், கருணைராஜன், மகிழ்மலர், ரஞ்சிதமலர், றோய், மனோ (Y.M.C.A.), லால்லா, சாந்தோ, ரஞ்சோ ஆகியோரின் அன்புத் தாயும் பத்மா, சாமுவேல், மினோன், ராஜன், அருட்செல்வம், கருணா, வண.பொபிமேதர், எட்வின், மதிதரன் ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (28.01.2007) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக கோப்பாய் பரி.கன்னி மரியாள் சேமக்காலைக்கு எடுத்தச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'த கவாசா',*
*கோப்பாய் மத்தி, கோப்பாய்.* (57565)
தகவல்:
**பிள்ளைகள்.**

### செல்லத்துரை அரசகேசரி

*(இலங்கை புகையிலைக் கூட்டுத்தாபனம் த.பினான்ஸ் லிமிட்ட் உத்தியோகத்தர் மற்றும் முன்னாள் ஆங்கில ஆசிரியர், யாழ். பரியோவான் கல்லூரி)*



வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை அரசகேசரி 27.01.2007 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் யோகவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - சிவநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும் சிவசொரூபி (லண்டன்), சிவசொரூபன் (கனடா), தவசொரூபன் (கமநல அபிவிருத்தி சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அன்பரசன், லதா, கௌசலை (பிரதேச செயலகம், உடுவில்) ஆகியோரின் அன்பு மாமனும் இராமலிங்கம் (லண்டன்), மனோன்மணி, காலஞ்சென்ற தெய்வநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் அபேதன், அபிராமி, அபிநயா, விக்கினேஸ்வரன், கஜன், கார்த்திகன் ஆகியோரின் அன்புப் பேரனும் லோகேஸ்வரி, பரமேஸ்வரி, புவனேஸ்வரி, ஜெகதீஸ்வரன், காலஞ்சென்ற ஆனந்தவிநாயகன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2007) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*471, K.K.S. றோட்,*
*யாழ்ப்பாணம்.* (57566)
தகவல்:
**அ.தவசொரூபன்**
[மகன்- கமநல அபிவிருத்தி சேவைகள் திணைக்களம்]

### கந்தையா பரத்துவாசன் (நெடுந்தீவு -காரப்போன்- அனலைதீவு)

**(முன்னாள் கட்டுப்பெத்தை தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளர்)**

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் ஊர்காவற்றுறை மேலைக்கரம்பொன் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் கந்தையாவின் (ஓய்வுபெற்ற அதிபர்) மகன் பரத்துவாசன் காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தையா - காலஞ்சென்ற தனலட்சுமி தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - நல்லம்மா தம்பதியரின் மருமகனும் கௌரிதேவியின் அருமைக் கணவரும் லவன், பிரகலாத், பராந்தகன், மதுமதி, சாண்டில்யன் ஆகியோரின் அன்புத் தந்தையும் முகுந்தன் (பிரான்ஸ்), இளங்கோவன்(உடையார்கட்டு), கலாவல்லி (யாழ்.மாநகர சபை நூலகர்) ஆகியோரின் சகோதரனும் கிருஸ்ணபிள்ளை (அனலைதீவு), ச.கனகசபை (கனடா), புஸ்பராணி (கனடா), மனோகரன் (ஜேர்மனி), சதானந்தன் (கனடா), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11 மணிக்கு தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குறிப்பு: கண்ணகை அம்மன் கோயில் துறையில் இருந்து முற்பகல் 9 மணிக்குப் படகுச்சேவை இடம்பெறும்.

*ஐயனார் கோயிலடி,*
*2 ஆம் வட்டாரம்,*
*அனலைதீவு.*
தகவல்:
க.கௌரிதேவி (மனைவி),
மகன்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.01.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org